**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.**
**Case No.CC.No. 302/2023**

**DEPOSITION OF WITNESS FOR PW.1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | சுதா | **Caste** | |
| **Father / Husband Name** | இளையரசு | **Occupation** | |
| **Village** | | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.06.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் குடியாத்தம் பகுதியில் வசித்துவருகிறேன்.நான் இல்லதரசியாக இருந்து வருகிறேன். கடந்த 22.03.2023 அன்று மாலை 5.30 மணியளவில் எனது சதீஷ்வரன் 2 வது தெரு எனது வீட்டின் முன்னர் நான் அமர்ந்திருந்தேன். அப்போது அங்கு வந்த ஆஜர் எதிரி என்னை தகாத வாரத்தையால் திட்டி, செங்கல்லை எடுத்து வந்து அடித்து, நாற்காளியில் இருந்த என்னை எட்டி உதைத்து எனது வயிற்றின் மீது உதைத்தார். அதில் எனக்கு அதிக ரத்த போக்கு ஏற்பபட்டது. மேலும் அவர் அணிந்திருந்த பேண்டை கழற்றி அசிங்கமாக காட்டினார்.

பின்னர் அருகில் இருந்தவர்கள் என்னை மீட்டு குடியாத்தம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். பின்னர் மேல் சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். நீதிமன்றத்தில் என்முன்பாக காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது. மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆகும். நீதிமன்றத்தில் என் முன்பாக காண்பிக்கப்படும் கல்லால் என்னை அடித்தார். மேற்படி அந்த கல் சா.பொ.1 ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். தற்போதும் எதிரி அதுபோன்று செய்து வருகிறார்.